# வழி பிறந்தது

வகுப்பு - 2, பாடம் - 9, தமிழ்

இந்தப் பாடம் இரு பக்க அளவிலான படக்கதை. வண்ணப்படங்களுடன் கதை கூறப்பட்டுள்ளதால் மாணவர்கள் தாங்களாகவே கதையை யூகிக்க முயற்சி செய்வார்கள்.

படக்கதையில் சிறிய அளவிலான வாக்கியங்கள் கதையை விவரிக்க பயண்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியரின் துணையுடன் கதையை புரிந்து கொள்வதும் அத்துடன் கதையின் மையக்கருத்துக்களை அவர்களுக்கு கொண்டு சேர்ப்பதே இப்பாடத்தின் நோக்கமாக உள்ளது.

பாடத்தில் ஒரு பந்து, குடை மற்றும் பெட்டி ஆகிய மூன்று நண்பர்கள் பாய்ந்தோடும் ஆறு, காற்று மற்றும் மழையைக் கடந்து செல்வதாக கதை கூறப்பட்டுள்ளது. கதையின் மையக் கருத்து ஒருவருக்கு ஒருவர் அவர்களது திறனுக்கு ஏற்ப உதவியாக இருப்பதே ஆகும்.

**அறிமுக சொற்கள்:**

பந்து (காற்றடைத்தது), பெட்டி, குடை, காடு, ஆறு, மலை, மரம், காற்று, சுறாவளி, வேகம், பிரச்சனை, ஒற்றுமை.

செயல்பாடுகள்:

பந்து, குடை மற்றும் பெட்டியாகிய பொருட்களை காண்பித்தல். இச்செயல்பாட்டின் போது மாணவர்கள் இவற்றிற்கான ஆங்கில வார்த்தையான ‘பால்’, ‘பாக்ஸ்’ என்று பயன்படுத்தினால் அதற்கான சரியான வார்த்தையை அறிமுகப்படுத்தலாம்.

கதையில் பந்து, குடை போன்ற உயிரற்ற பொருட்கள் பேசுமா? என்று எனது மாணவர்கள் பொதுவாக கேள்வியை எழுப்புவார்கள். அவர்களுக்க இது ‘கதை’ என்று புரிய வைப்பது அவசியாமாகின்றது.

மாணவர்களை காடு ஒன்றை கற்பனை செய்து வரையச் செய்து வண்ணம் தீட்டும் செயல்பாட்டை செயல்படுத்தலாம். அதன் பின்னர் அவர்கள் வரைந்த படத்தில் காடு, ஆறு, மலை போன்றவற்றின் பெயர்களை அதன் அருகே எழுதச்செய்திடலாம். அவர்களாகவே வரைந்து அதனை பெயரிட்டு எழுதுவதால் அவர்களின் புரிதல் அதிகரிக்கின்றது.

‘உதவி’ மற்றும் ‘ஒற்றுமை’ ஆகிய நற்பண்புகளே இந்த பாடத்தின் கருக்கதையாக உள்ளதை காணமுடிகின்றது. எனவே இந்த இரண்டையும் சரியாக மாணவர்கள் புரிந்து கொண்டு உள்ளார்களா என்று உறுதி செயவது அவசியம்,

கதையைக் வாசித்த பிறகு, மாணவர்களின் சூழலுக்கு ஏற்ப சில கேல்விகள் மூலம் கலந்துரையாடல்கள் நிகழ்த்தலாம்.

- நீங்கள் யார் யாருக்கு உதவி செய்வீங்க? எதற்காக உதவி செய்வீங்க?
- இது போலவே வேறு கதைகளைக் கேள்விப் பட்டதுண்டா?
- வீட்டில் அம்மாவுக்கு/அப்பாவுக்கு என்ன என்ன உதவி செய்வீங்க?
- உங்கள் தாத்தா பாட்டிக்கு உதவி செய்வீங்க?

இது போன்றக் கேள்விகள் கேட்கும் பொழுது பல்வேறு விதமான கதைகளையும், அனுபவங்களையும் நகைச்சுவை கலந்து ஆசிரியர்களாகிய நாம் உக்குவித்தல் அவசியம். இது நமது பாடவேளையை மிகவும் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கான இடமாக மாற்றிவிடும்.

இறுதியாக மாணவர்களை ஒருவர் பின் ஒருவராக கதையின் காட்சிகளை விளக்கச்செய்தால் பாடத்தின் நோக்கம் எளிதில் நிறைவுற்று இருக்கும் என்பதை உறுதிசெய்து கொள்ளமுடியும். மேலும் பல படக்கதைகளை இந்தப்பாடத்துடன் இணைத்து கற்பிக்கலாம்.

**மாதிரிப்படக்கதை :**













**செ. மாலதி**
தொபஆ, அதொப, வடுவக்குப்பம்